விலை ரூபா 1-25

26-2-1986 PERIODICALS DIVISION


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 16 ஜ. ஆகி 18 இதழ் 18
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28 2-1986


## விமானத் தாக்குதல்கள் தொடருமாம்!

[கொழும்பு]
தீவிரவாதிகளின் முகாம் களை ஒழிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் விமானத் தாக்குதல்கள் நடைபெறும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகிறது.
தமிழீழ விடுதலைப் புலிகள்,
(5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை உதவிகளை நிறுத்த நோர்வே, கனடா முடிவு!

(கொழும்பு)
இலங்கைக்கான உதவிகளை நிறுத்துவதென நோர்வேயும் கனடாவும் தீர்மானித்துள்ளதாக பி. பி சி வானொலி அறிவித்துள்ளது
கடந்த சில நாட்களாக வட பகுதியில் அப்பாவி மக்கள்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதலைத் தொடர்ந்தும் இலங்கைக்கான நிதி மற்றும்
[5ம் பக்கம் பார்க்க]

# மீண்டும் விமானக்குண்டுவீச்சு!

# மூவர் பலி! வீடுகள் சேதம்!

(ஏ. வி. மாணிக்கம்)

**எட்டு நாட்களில் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் நேற்று கடுமையான விமானக்குண்டு வீச்சுக்கு இலக்கானது!**

**யாழ். குடாநாட்டிலுள்ள 5 கிராமங்களில் குடிசனச் செறிவுள்ள பகுதிகளின் மீது விமானங்கள் உக்கிரமாகக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தின.**

விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலினல் இந்துஆலயம், தும்புத் தொழிற்சாலை உட்பட வீடுகள், பலத்த சேதமடைந்துள்ளன. இந்துமதகுரு, ஒரு வயோதிபமாது, ஒரு இளைஞர் பலியானர்கள்! ஐந்துபேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர்;

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுள்இருவர் ஆபத்தான நிலையிலுள்ளனர்

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள சுருவிலிலும், வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள மாதகலிலும், மானிப்பாய்த் தொகுதியிலுள்ள சுதுமலை, தாவடி தெற்குப்பகுதியிலும், நல்லூர்த் தொகுதியிலுள்ள கோண்டாவில் கிழக்கிலும் உள்ள வீடுகளே குண்டுவீச்சுத் தாக்குதலுக்கிலக்கானவை.

**ஊர்காவற்றுறை**

நேற்றுக்காலை 7மணியளவில் சுருவிலிலுள்ள வீட்டின் மீது விமானத்திலிருந்து ஏழுகுண்டு
[8-ம் பக்கம் பார்க்க]

## ரொமேஷ் தமிழகம் விரைவு!

[புதுடில்லி]
இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண இந்தியா ஒரு மாத கால அவகாசத்தைக் கொடுத்துள்ள அதேவேளையில், திரு. ரொமேஷ் பண்டாரி தமிழ்நாட்டிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மற்றும் தமிழ் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களுடன் அவசர பேச்சுவார்த்தைகளை நடாத்த தமிழ்நாடு விரைந்துள்ளதாக அறியப்படுகின்றது.

## இலங்கைப் பிரச்னையில் இந்தியாவின் நிலை:
## பஹுத் பதில் திருப்தி இல்லை என்று கூறி எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு!

(புதுடில்லி)
இலங்கைத் தமிழர்.பிரச்னை குறித்து நேற்று ராஜ்ய சபையில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரேரணையின் போது எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்திய வெளியுறவு அமைச்சரின் பதிலில் திருப்தி இல்லை என்று கூறி சபையிலிருந்து வெளிநடப்பு செய்தன!

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹுத் இலங்கை அரசு இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இனப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும்
(5-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவுக்கு கூட்டணி கோரிக்கை

(சென்னை)
யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த விமானக்குண்டு வீச்சினல் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பொருட்சேதம் பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அவசரமாக அனுப்பிய தந்தியில் விளக்கி உடனடியாக இப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளது. (ச)


## உருக்கமான வேண்டுகோள்

எனது மகனும், செல்லப்பா அன்கொம்பனி உரிமையாளருமாகிய **செ. சிறீஸ்கந்தன்** என்பவரை 7-2-86 மாலை 6 மணியளவில் அவரது கடையில் வைத்து அன்பாக அழைத்துச் சென்றுவிட்டு இவ்வளவு நாட்களாக எமக்கு ஒரு தகவலும் தராது வைத்திருப்பவர்களுக்கு அன்னரின் மனைவி, பிள்ளைகளின் உடல்நிலை மனநிலை மோசமடைந்து வருகிறபடியால் அவரை வெகு விரைவில் விடுதலை செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
தாயார், மனைவி, பிள்ளைகள்.

C 985


## விமானக் குண்டுவீச்சின் மத்தியிலும்
## 5 மைல் தூரம் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)
ஆயுதப்படைகளை தமிழ்ப் பகுதிகளிலிருந்து வாபஸ் பெறுமாறும், போர் விமானக்குண்டு வீச்சுக்களை, உடன் நிறுத்துமாறும் கோரி அண்ணா தி. மு. க. அனுசரணையுடன் 15அமைப்புக்களின் எழுச்சிமயமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

ஐந்து மைல் தூரம் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் ஆரம்பமாகு முன்னரும், ஆரம்பித்த பின்னரும்
(5ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

[புறெயிலர்) இறைச்சிக்கு தேவையான சோழிகள்மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: Red Rose Farm தெணியம் பைதெரு, வல்வெட்டித்துறை. (C962)

Model N V 780 National 7 System 4 Head System விற்பனைக்குண்டு. தொடர்பு: P. J. C. குமார் டச் ரூேட், உடுவில். (C 968)

றெயிலர் [Trailor] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மில்க்வைற், யாழ்ப்பாணம். [A 301]

முட்டை, புறெயிலர்கோழி [BROILERS] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 660, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C669]

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு; T. செல்வராசா, 46, சந்தன மாதா கோவில் ஒழுங்கை, சுண்டிக்குளி. [C 980]

## வகுப்புகள்

ரேடியோ, ரீ. வி. (டெக் உட்பட), வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், Short-hand and Typing புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதம் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 974)

General Arts Qualifying பரீட்சைகளுக்கு, உயர்தர ஆங்கில மொழியுட்பட விருப்பத்திற்குரிய பாடங்களைச் சிறப்புப் பட்டதாரிகள் கற்பிக்கின்றார்கள். ஆறு தொடக்கம் பல்கலைக்கழகத்தரம்வரை ஆங்கிலம், ஆசிரியகலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கற்பிக்கின்றார். வட்டுக்கோட்டை, மாவடிச்சந்தி கலாநிலையமுதல் வரோடு உடனே நேரில் தொடர்புகொள்க. (C 965)

## தேவை

அனுபவம் திறமை உடைய கடைச்சல் தொழில் (Lethe man), Welder [வெல்டர்], Carpenter, (தச்சுவேலை) தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. நேரில்வரவும். கடைச்சல் — வெல்டிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. பென்ரகன் பிறைவேற் லிமிட்டட், 271, கச்சேரி-நல்லூர் வீதி, நல்லூர். [C 945]

## சேவை

இப்பில் இப்பில் விதைகள் இலவசமாகப் பெற்றுக்கொள்ள சுயவிலாசமிட்ட -/75 சத முத்திரை யொட்டிய லோங் என்வலப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [A302

## தவறிவிட்டது

25-2-86இல் யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லாகம்போன மினி வானில் 1 குடை, 1 சோடி சப்பாத்து, மற்றும் ஆபத்தான ஒருவருக்கு வேண்டிய மருந்துவகைகளும் சிவப்பு பாக்குடன் சேர்ந்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்: K. நாகம்மா, 12/7, கென்னடி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம். [C978]

### பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்(வ/து)

## கேள்வி கோரல்

எமது சங்கத்தின் கொள்வனவு உபசபைக்கூட்டம் பிரதி வியாழக்கிழமைகளிலும் பி.ப. 3-00 மணிக்கு தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவிருப்பதால், அரிசி உட்பட சகல உப உணவுப் பொருட்களுக்கான கேள்விகளையும் அன்றையதினம் பி. ப. 3-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலமோ, நேரிலோ சமர்ப்பிக்கலாம். மாதிரிப் பொருள்களும் சமர்ப்பித்தல்வேண்டும்.

**பொதுமுகாமை யாளர்,**

1986-02-22.

(A 305)

# TECHNICAL COURSES

## ஆரம்பம்: 1 - 3 - 86

1. LONDON EXAM—CITY and GUILDS - 1987
   சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
2. மோட்டார் றீ-வைண்டிங் பயிற்சி
   3 மாதம் — முழுப்பயிற்சிக்கும் ரூபா 450/-
   திங்கள், செவ்வாய்க் கிழமைகளில்
3. வயறிங் பயிற்சி
   1½ மாதம் — முழுப்பயிற்சிக்கும் ரூபா 200/-
   புதன், வியாழக்கிழமைகளில்

இன்னும் ஒரு சில வெற்றிடங்களே உள்ளன.

**ஒமேகா,** மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(ஈழநாட்டிற்கு எதிரில்)

(A 298)

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கணபதிப்பிள்ளை
சின்னத்தம்பி

**அன்னையின் மடியில்:**
**15-07-1926**

**ஆண்டவன் அணைப்பில்:**
**20-02-1980**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

33/4, இராமநாதன் வீதி,
(கலட்டி),
யாழ்ப்பாணம்.

[C 977]

உ

## நன்றி நவில்கின்றோம்



அமரர்
சங்கரப்பிள்ளை
அம்பிகைபாகன்
அவர்கள்

எங்கள் இல்லத்தரசன் இவ்வுலக வாழ்க்கைநீத்த செய்தி அறிந்து எமக்கு அநுதாபம் தெரிவிக்க நேரில் வந்தவர்கள், இறுதிக்கிரியைகளிற் பங்கு பற்றியவர்கள், ஆறுதற் கடிதங்கள், தந்திகள், அநுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், மலர் வளையங்கள் மாலைகள் அணிவித்தவர்கள், இன்னும் பலவித உதவிகள் புரிந்தவர்கள், தங்கள் பழைய அதிபரின் இறுதிப் பயணத்தில் கலங்கி நின்ற வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர்கள், மாணுக்கர்கள், பழைய மாணுக்கர்கள் அனைவருக்கும் எங்கள் எல்லோரின் இதயத்தெழும் நன்றியை நவில்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி
அம்பிகைபாகனும்
குடும்பத்தினர்
அனைவரும்.

'மணிமனை',
மல்லாகம்.

[C 306]

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**அ. செபமாலை**

**இறைவனடியில்**
**29-2-84**
**நினைவுநாள்**
**01-03-86**

ஆலமரம்போல் அனைவருக்கும் நிழல்கொடுத்து ஆதரித்த அன்புத்தெய்வமே, ஈராண்டு சென்றாலும் என்றும் எம்முடன் வாழ்கின்றாய். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 1-3-86 சனி மாலை 5 மணிக்கு வவு/இளமருதங்குளம் புனித உத்தரிய மாதா ஆலயத்தில் துக்கப்பூசை இடம் பெறும். உறவினர்கள், அன்பர்கள் நேரிலும், செபத்திலும் அவருக்காக செபிக்க வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இளமருதங்குளம்,
வவுனியா. [C 972]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற விஜயரத்தினம் விஜயகுமார் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயமாக.

மரணமெய்தியவர்

விஜயரத்தினம் கைம்பெண் இராசபாக்கியம், அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. தற்போது 166 முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3941

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு- குலசிங்கம்,
7-01-1986 பதிவாளர்

வரைவு;

இ. சிவசுப்பிரமணியம்,
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணிகள்
(C 906)

## ஆரியரத்ன சமரசத்திட்டம்

(வவனியா]

வவனியா மாவட்டத்தில் வாழும் தமிழர்களும் சிங்களவர்களும் வழமைபோல் ஐக்கியமாக வாழ்வதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டுவதில் கலாநிதி ஏ, ரி. ஆரியரத்ன ஈடுபட்டுள்ளார்.

வவனியா மாவட்டஅரசஅலுவலர்கள் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கிலேயே கலாநிதி ஆரியரத்ன மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

வவனியாவில் மக்களை வீடுகளுடன் குடியமர்த்தும் திட்டத்துக்கு அமைய ஓராயிரம் வீடுகள் பூர்வாங்கப் பட்சமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பிலும் இதே போன்ற ஒரு வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்க சர்வதேச இயக்கம் ஆயத்தங்களை செய்துவருகின்ற இதேவேளையில் எவ்வித கஷ்டங்கள் மத்தியிலும் அனுதைகளுக்கு ஆதரவளிப்பதே தமது பிரதான நோக்கம் என கலாநிதி ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
ச. உமாகாந்தன்
[ராஜா]

**அன்னையின் மடியில்:**
**30-10-1962**

**ஆண்டவன் அடியில்:**
**29-1-1986**

அன்புடனும் பாசத்துடனும் இன்சொல்லுடனும் வாழ்ந்து எல்லோருக்கும் இன்முகம்காட்டி அன்பினுலும் செல்லக் கதையினுலும் அனைவரையும் ஆட்கொண்டு எம்மையெல்லாம் பெருமை கொள்ளச்செய்து திடீரென எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்ட எங்கள் நெஞ்சம் மறவாத அன்புச் செல்வமே! நீ வணங்கிய தெய்வமே உன்னைக்காக்க வில்லை. உன் பாச உள்ளங்கள் ஏங்குதையா - நீ தோன்ருயோ மீண்டும் என்று வாடுதையா

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
அத்தான், மருமகன்,
மாமன், மாமிமார்,
பெரியப்பா, பெரியம்மா
மார், மச்சாள்மார்,
சித்தப்பாமார்,
அன்ரிமார்,
மற்றும் உற்றூர்,
உறவினர், நண்பர்கள்.

நா. சண்முகநாதன்,
பெற்றூேல் செற்றடி,
மானிப்பாய்.

[C 973]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஹவாய்த்தீவுக்கு மார்க்கோஸ் போய்ச்சேர்ந்தார்

# திருப்பிஅனுப்புமாறு அக்கினோ கோரமாட்டார்



அக்கினோ

### மணிலா கூறும் மணியான பாடம்

திருமதி கொரேஸன் அக்கினோ பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி ஆசனத்தைச் சுவீகரித்துக்கொண்டால் அது மார்க்கோஸின் இருபதாண்டு சர்வாதிகாரத்துக்கு அடித்த சாவுமணி மட்டுமல்ல, இனியொரு விதிசெய்ய பிலிப்பைன்ஸ் மக்கள் எடுத்துள்ள ஒரு உறுதியான சங்கற்பமும் கூட!

அமெரிக்காவில் அரசியல் புகலிடம் தேடி அங்கு மறைந்திருந்தவரும் அமெரிக்க அரசுக்கும் ஜனாதிபதி மார்க்கோசுக்குமிடையிலான ஓர் உடன்பாட்டினடிப்படையில் மீண்டும் பிலிப்பைன்ஸுக்கு விமானத்தில் வந்திறங்கும்போதே திரு. அக்கினோ கொலை செய்யப்பட்டார். இவரது கொலை ஒரு நாட்டின் தலைவிதியையே மாற்றியமைப்பதற்கு மட்டும் உதவி செய்யவில்லை. சர்வாதிகாரத்திற்கே சாவு மணி அடித்திருக்கிறது.

'தினை விதைத்தவன் தினை அறுப்பான்! வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற வகையில் மணிலா கூறும் மணியான பாடம் முழு உலகமுமே மனங்கொள்ள வேண்டிய விஷயம்!

இது கொரேஸனுக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்தை நேசிக்கும் எல்லோருக்குமே கிடைத்த வெற்றியாகும்.

யார் குற்றியும் அரிசியாக வேண்டும். உலக்கைகள் சரியாக இருந்தால் சரி!

-- 'பெரி'

(மணிலா)

**பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறியுள்ள முன்னாள் ஜனாதிபதி திரு. மார்க்கோஸை மீண்டும் பிலிப்பைன்சுக்கு நாடு கடத்துமாறு தான் கேட்கப்போவதில்லை என திருமதி அக்கினோ கூறியுள்ளார். இதனிடையே திரு. மார்க்கோஸ் தற்போது ஹவாய் போய்ச் சேர்ந்துள்ளார் எனத் தகவல் வந்துள்ளது.**

திருமதி அக்கினோ ஜனாதிபதியாகப் பதவியேற்றபின் அளித்த 1வது பேட்டியில், ஜனாதிபதி மார்க்கோஸை நாடு கடத்துமாறு தான் கேட்கப்பாவேதில்லை எனவும், அவர் விரும்பினால் நாடு திரும்பலாம் எனவும் கூறினார்.

புதிய மக்கள் ராணுவத்துடன் யுத்த நிறுத்தமொன்றை அனுசரிக்கப்போவதாகக் கூறியுள்ள திருமதி அக்கினோ கைது செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பளிக்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

திருமதி அக்கினோவுடன் உப ஜனாதிபதியாகப் போட்டியிட்ட திரு. சல்வடோர் லோறல் உப ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி அக்கினோவின் அமைச்சரவையில், மார்க்கோஸை எதிர்த்து பல வர்த்தகப்பிரமுகர்களும், மதகுருமாரும்இடம்பெற்றுள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாட்டை விட்டு வெளியேறி பசுபிக் தீவான குவாமுக்குச் சென்ற திரு. மார்க்கோசும் குழுவினரும் அங்கு சுமார் 13 மணித்தியாவம் தங்கியிருந்துவிட்டு இன்னொரு அமெரிக்கத்தீவான 'ஹவாய்க்குப்' போய்ச் சேர்ந்துள்ளனர்.

அங்கிருந்து தமது இறுதி வசிப்பிடத்திற்குப் போவார்கள் எனஅமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள எங்கு போவரென்று முடிவு சொல்லவில்லைஎனினும்பெரும்பாலும் அமெரிக்காவுக்கே செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

## எகிப்தில் படைகள் மோதல் 15 பேர் பலி 300: பேர் காயம்

(கெய்ரோ)

எகிப்தில் ஆயுதப்படைகளிடையே ஏற்பட்ட மோதல்களில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கட்டாய ராணுவச் சேவையினால் விரக்தியடைந்திருந்த படைவீரர்களே இதனைச் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

தலைநகரான கெய்ரோவில் ஆரம்பித்த இக் கலகங்கள் சூயஸ் கால்வாய் நகரான இஸ்மாலியாவுக்கும் பரவியுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்நகரங்களில் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கலகங்களை அடுத்து விசேட அறிக்கையொன்றை விடுத்த ஜனாதிபதி திரு. முபாரக் கெய்ரோ இப்போது ராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், எக்காரணம் கொண்டும் கலகக்காரர்கள் மன்னிக்கப் படமாட்டார்கள் எனவும் தெரிவித்தார். [செ]

### றீகனின் கோரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்க மக்கள் தனது பாதுகாப்புத் திட்டங்களையும், கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி ரொனல்ட் றீகன் கேட்டுள்ளார். அவரது உத்தியோக பூர்வ வாசஸ் தலமான வெள்ளை மாளிகையிலிருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி உரை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது நிர்வாகத்தின் பாதுகாப்புச் செலவீனத்தைக் குறைக்கக்கோரும் அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் கொள்கையைக் கண்டித்த அவர், ஒரு வலுவுள்ள அமெரிக்காவே இன்று தேவைப்படுகிறது எனக் கூறினார். (செ)

# இலங்கை நிலைமை பற்றி டிக்சிற் அறிக்கை கொடுத்தார்

[புதுடில்லி]

இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் வன்முறைகளுக்காளாகி வருவதுபற்றிய தகவல்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு டிக்சிற், இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத்திடம் கையளித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இச்சந்திப்பு நடைபெற்றது. இலங்கையின் நிலவரம் பற்றியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடனான தமது சந்திப்பின்போது கூறப்பட்டவை பற்றியும் திரு டிக்சிற், திரு. பகத்திடம் கூறியுள்ளதாக தெரியவருகிறது. [செ]

### ஹெய்ட்டிக்கு மீண்டும் அமெரிக்கா உதவி

வாஷிங்டன்]

கரீபியத்தீவான ஹெய்ட்டிக்கு மீண்டும் நிதிஉதவி அளிக்க அமெரிக்கா இணங்கி

[7-ம் பக்கம் பார்க்க]

### உலகச் செய்தி

### ராஜீவ் வாழ்த்துகிறார்!

[புதுடில்லி]

பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதியாகியுள்ள திருமதி அக்கினோவை வாழ்த்தி இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

பிலிப்பைன்ஸில்ஜனநாயகம் மீண்டும் மலர, திருமதி அக்கினோ ஜனாதிபதியானமை ஒரு நல்ல அறிகுறி என திரு. ராஜீவ்காந்தி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

# குற்றவாளியே விசாரணை நடத்தும் அதிசயம்

### கூட்டணி கண்டனம்

(சென்னை)

லங்காவில் அப்பாவிமக்களை படுகொலை செய்த ராணுவத்தினர் செய்த குற்றங்களை விசாரிக்க ராணுவத்தினரையே நீதிபதியாக நியமிக்கும் ஒரு முயற்சியே அண்மையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனெனத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுபற்றி சென்னையில்விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் "இவ் விசாரணைக் கமிஷன்

அங்குநடைபெற்ற படுகொலைச் சம்பவங்களின் உண்மையை பூசிமெழுகும் ஒருநடவடிக்கையாகும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இக் கமிஷனை மக்கள் நிராகரிக்கிறார்கள் என அக்கரைப்பற்று மட்டக்களப்பு பிரஜைகள் குழுக்கள் கருத்துவெளியிட்டுள்ளன. (பெ)

# மட்டக்களப்பில் மீண்டும் பலர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மக்கள் வங்கிக் கிளையில் நேற்றுக்காலை தமது அலுவல்களுக்காக வந்திருந்த மூன்று உத்தியோகத்தர்கள் இரகசியப் பிரிவுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் ஒருவர்.

இம்மூவரும் படுவான்கரைப் பகுதியிலுள்ள கரவெட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள்.

இப்பகுதியில் போராளிகள் முகாம் இருப்பது சம்பந்தமாக விசாரணை செய்வதற்குக் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாம்.

அரசடிச் சந்தி, கோட்டைமுனைப்பாலம் ஆகிய இடங்களிலும் அதிரடிப் பிரிவுப் பொலிசார் சோதனை நடாத்தி 15 பேரைக் கைது செய்துள்ளனர்.

இருவாரங்களுக்குப் பின்னர் ஆயுதப் படையினரின் நடமாட்டம் தோன்றியுள்ளதால் மக்கள் மத்தியில் பதற்றநிலை தோன்றியுள்ளது. (மா)

# "என்மகனும் மற்றுமொரு சிறுவனும் எரிந்து கருகி பலியானார்கள்!"

## மரணவிசாரணையில் பெண் சாட்சியம்

— கா. யோகநாதன் —

"தாவடிப்பகுதியில் விமானங்கள் வந்து குண்டு வீசியபோது வீட்டுமதில் சரிந்து விழுந்தது. என்மகனும், என் வீட்டில் உதவிக்கு நின்ற மலைநாட்டுச் சிறுவனும் எரிந்துகருகிப்பலியானார்கள். அப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன. தென்னை,மா, பலா மரங்கள் முறிந்து விழுந்தன. வான்பயிர்கள்பல நாசமாகின. விமானங்கள் குண்டுவீச்சு முடிந்ததும், ஹெலிகொப்டர் வந்து வட்டமிட்டுச் சுட்டுக்கொண்டிருந்தது."

தாவடியில் குண்டுவீச்சுக்கு பலியான எஸ் மயூதரன் (7வயது) கெ. ராஜசேகரன் (10 வயது) ஆகியோரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பலியான மயூதரனின் தாயார் திருமதி எஸ். பத்மாவதி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை மரண விசாரணை நடைபெற்றது.

அவர்தொடர்ந்து கூறியதாவது- காலஞ்சென்ற எஸ். மயூதரன்என்மூத்த புதல்வன். அவனுக்கு 7 வயது. மலைநாட்டைச் சேர்ந்த ராஜசேகரன் என் வீட்டில் உதவியாளராக இருந்தார், அவருக்கு 10வயது என் கணவர் நுவரேலியாவில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்.

### விமானங்கள் வந்தன

சம்பவதினம் மாலை 5-00 மணிக்கு என் பிள்ளைகளும் ராஜசேகரனும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். என் வீட்டில் திருத்த வேலைகள் நடந்துகொண்டிருந்தது. நான் அவற்றைப் பார்த்தபடி உள்ளே இருந்தேன். அப்போது விமானங்கள் பறக்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து குண்டுகள் போடும் சத்தமும் வெடிக்கும் சத்தமும் கேட்டன.

குண்டு ஒன்று வெடிப்பதையும், அதைத் தொடர்ந்து வீட்டுக் கூரை ஒன்று விழுவதையும் பார்த்தேன். எங்கும் புகைகிளம்பியது பிள்ளைகளைக் கூப்பிட்டேன், அவர்கள் வரவில்லை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒரு ஜன சமுதாயத்தின் நிலை உயரவேண்டுமாயின் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின்கண் சோம்பலற்ற முயற்சியும் நல்ல அறிவும் இருக்க வேண்டும்.

—ராஜாஜி

# நமது நோக்கு

## ஒரு மாத அவகாசம்!

தமிழ் மக்கள் தினசரி படுகொலை செய்யப்பட்டுவரும் சம்பவங்கள் குறித்து இந்திய பாராளுமன்றத்தின் கீழ்சபை (லோகசபை) யில் பல உறுப்பினர்கள் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருப்பதுடன், மத்திய அரசின் அசமந்தப்போக்கினையும் கண்டித்திருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பதலளித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. ஆர். பகத் அவர்கள் அங்கத்தவர்களின் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டுள்ள அதேசமயம், 'இலங்கையரசு அங்குள்ள இனப் பிரச்னைக்கு ஒரு மாத காலத்துக்குள் தீர்வு காண முன்வர வேண்டும்' எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது இனக்கொலைக்கு ஒப்பாகும் என்ற உறுப்பினர்களின் கருத்தையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இந்திய பாராளுமன்றத்தில் இப்படியான கருத்தினை பொறுப்புள்ள உறுப்பினர்களும் முக்கியஅமைச்சர் ஒருவரும் பகிரங்கப்படுத்தியுள்ள அதேவேளையில் மீண்டும் யாழ். குடாநாட்டு மக்கள் விமானத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர் கடந்த 19 ம்திகதி மாலையில் தாக்கப்பட்ட அதே பகுதியில் நேற்றுக் காலையில் மீண்டும் விமானத்தாக்குதலும் ஹெலிகொப்டர் தாக்குதலும் நடைபெற்றுள்ளன.

அரசியல் தீர்வில் ஆர்வத்துடன் இருப்பதுபோல் காட்டிக்கொள்வதும் அதேவேளை, ராணுவத்தைக் கொண்டு அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அட்டூழியங்களை நடத்துவதும் இலங்கையரசின் வழக்கமாகி வருகின்றது.

அமைதியான அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு இந்திய அரசின் உதவியினை ஆரம்பத்தில் வலியகேட்டுச்சென்ற இலங்கை அரசு; பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம், இரகசிய ஆலோசனை, திம்பு மகாநாடு என்றெல்லாம் காலம் கடத்தி தனது நிலையை பன்மடங்கு பலப்படுத்திக் கொண்டதின்பின் உதவிக்கு வந்த இந்திய அரசுக்கே 'வால்' காட்ட ஆரம்பித்து விட்டது

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!

முப்பது வருடங்களுக்கு மேலாக பேரின சர்வாதிகாரத்தின் கீழ் அல்லலுற்று பொறுமை இழந்ததின் விளைவாகவே தமிழ் மக்கள் மத்தியில் தீவிரவாதம் தலையெடுக்க ஆரம்பித்தது

தமிழ் இனத்தைப் படிப்படியாக உரிமை இழக்கச் செய்வதும், சகல மட்டங்களிலும் பேரினத்தவர்களும், அவர்களின் மொழியும் ஆக்கிரமித்துக்கொள்வதுமே தென்னிலங்கை அரசியல்கட்சிகளின் நோக்கமாக இருந்து வந்துள்ளது. தமிழர்கள் தமது தாயகப் பிரதேசங்களிலும்கூட தமது ஜனநாயக உரிமைகளை இழந்து அடிமைகளைப் போன்று நடத்தப்படும் அளவுக்கு நிலைமைகள் மாறியதின் விளைவே இது!

இருந்தும், இந்த இரு பெரிய இனங்களுக்கிடையிலான சிக்கலை அவிழ்த்து ஒரேநாட்டில் தத்தமது உரிமைகளையும் பிரதேசங்களையும் பேணிக்கொண்டு வாழ்வதற்கு உதவும்வகையில் இந்திய அரசு பல்வேறு வகையிலும் உதவி புரிய முன்வந்தது.

அந்தஉதவியை இலங்கை அரசு சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல், பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைச் சாட்டாக வைத்துக்கொண்டு இராணுவத்தின் மூலமே தீர்வுகாணும் தனது நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகளை முடுக்கி வந்துள்ளது. இதன் உச்சக்கட்டமாக விமானத்திலிருந்து குண்டு வீசி தமிழ்க் கிராமங்களை அழிக்கும் நடவடிக்கைகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

இந்த நிலைமையில் இந்திய அரசு விடுத்துள்ள ஒரு மாத கால அவகாசம் இலங்கை அரசின் கண்ணைத் திறக்குமா? அல்லது கண்மூடித்தனமான கொடூரத் தாக்குதல்கள் அதிகரிக்கப்படுமா என்பது தெரியவில்லை.

எதுவானாலும், இந்திய அரசும் இலங்கை அரசின் சாக்குப்போக்குகளுக்குச் செவிமடுத்து களைத்துப் போய்விட்டமை தெரிகின்றது.

எனவே தினமும் பலியாகிக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாக்க இந்திய அரசு தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்கும் காலம் அண்மித்துவிட்டது என்பதை மட்டும் இப்போது திட்டவட்டமாகக் கூறிவைக்கலாம்.

## சமர்தான சபை

[வல்வெட்டித்துறை]

வடமராட்சிப் பகுதிகளில் உள்ள சமாதான சபைகளின் ஒருங்கிணைப்புக்கு ஏற்ப கற்கோவளத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கற்கோவளம் சமாதானசபைக்கு பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஞே. அருமைத்துரை, செயலாளர் ச. தேவதாசன், பொருளாளர் வ. சோமசுந்தரம் மற்றும் ஆர். எல். வேலும்மயிலும், வ. இராமலிங்கம், பொ. அருந்தவராசா, சி. பாஸ்கரன், சி. பரஞ்சோதி, மு. தணிகாசலம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# சித்த மருத்துவத்தில் ஆய்வுகள் அவசியம்

சித்த மருத்துவம் தமிழ் இனத்தவர்கள்பாரம்பரியமாகப் பயின்றுவரும் ஒரு புகழ்பெற்ற மருத்துவத் துறையாகும். இருந்தும் மேனாட்டு மருத்துவத் துறையைப் போன்று இதில் ஆய்வுகள் நடத்தப்படவில்லை. ஆய்வுகளை மேற்கொண்டவர்களும் அவைகளை முறைப்படி பகிரங்கப்படுத்தவில்லை. மேலும் இத்துறையில் பயின்றவர்களில் அனேகர் மேனாட்டு மருந்துகளையே பயன்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்கள். இந்நிலையில் யாழ். பல்கலைக் கழகம் சித்தமருத்துவத் துறையொன்றை ஆரம்பித்து பயிற்சியளிக்கவும் ஆராய்ச்சிகள் நடத்தவும் ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இத்துறையின் மாணவர் மன்றம், வெளியிட்டுள்ள சித்த மருத்துவம் என்ற தலைப்பிலான சஞ்சிகையொன்றை வெளியிட்டுள்ளது. அச்சஞ்சிகையில் சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானி எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

[ஆ-ர்]

### டாக்டர் எஸ். பவானி

சித்த வைத்தியமென்பது பல உண்மைகளை உள்ளடக்கிய ஒரு உயர்ந்த கலையாகும், விஞ்ஞானத்தினால் அறியமுடியாதவற்றை சித்தர்கள் மெய்ஞானத்தில் ஆரம்பத்திலேயே அறிந்துள்ளனர்' அப்படியாக சித்த வைத்தியத்தில் இலைமறைகாய் போலுள்ள உண்மைகளை ஆய்வுகளின் மூலம் வெளிப்படையாக்கினால் மனித சமுதாயம் பூரண பலனைப்பெறும் என்பது திண்ணம்.

### மணி மந்திரம் ஔடதம்

சித்தவைத்தியத்தில் மணி, மந்திரம், ஔடதம என்ற மூன்றும் முக்கிய இடம்பெறுகின்றன. மணி என்பது கிரகங்களின் சேர்க்கையால் ஏற்படும் காலமாற்றங்களைக் குறிக்கும் சாஸ்திரக் கலையாகும். உதாரணமாக பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவற்றை நாம் ஆராய்ந்தால் எந்தவித கருவிகளும் இல்லாமல் குறிப்பிட்ட ஒரு தினத்தில் சந்திர கிரகணம் ஏற்படும், ஒரு நாட்டில் பூகம்பம் ஏற்படும், வெள்ளப்பெருக்கு ஏற்படும், புயல் காற்று வீசும், யுத்தம் ஏற்படும் என்றெல்லாம் கணிப்பதற்கு மிகவும் பரந்த அடிப்படையிலான அறிவை மக்கள் பெற்றிருந்தனர் இந்தக் கலையை வைத்தியன் அறிந்திருப்பதன் மூலம் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள நோய்க்கும் அவரது கிரகசேர்க்கைக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து அந்நோயின் தன்மையை அல்லது சாத்தியா சாத்தியத்தை அறிந்து சிகிச்சையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். சிலர் மணி என்றபதம் நவமணிகள் அல்லது நவரத்தினங்களைக்குறிக்கின்றதாகக் கருதுகின்றனர். ஒவ்வொரு கிரகங்களின் தோஷங்கள் அல்லது தீயவினைகள் நீங்க ஒவ்வொரு வகையான மணிகளை ஆபரணமாகஅணிவதன்மூலம் அத்தோஷங்களின் [illegible]விளைவுகளிலிருந்து தணிவு ஏற்படும் என இயம்புகின்றனர். இதுவும் சாஸ்திரத்தை அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்பட்ட முடிவு என்பது வெளிப்படை.

### ஆய்வு அவசியம்

மந்திரம் எனக் கூறும்போது குறிப்பிட்ட சில நோய்கள் தெய்வ சம்பந்தத்தாலும் சில தீயசக்திகளாலும் ஏற்படும் போது அவற்றைச் சிகிச்சிக்க முதற் சிலமந்திரங்களைச்செபிப்பதன் மூலம் அந்த நோயின் தீவிரத்தன்மைகளை குறைக்கலாம் எனச் சித்த வைத்தியர்கள் அறிந்திருந்தனர். அதாவது தற்போதும் பார்வை பார்த்தல், மற்றும் விஷத்தால் ஒருவர் தீண்டப்பட்டிருந்தால் அவருக்கு மந்திரங்களைச் செபிப்பதன் மூலம் அதன் தீவிரத்தன்மையைத் தணித்தல், மந்திரம் செபித்து நூல்கட்டுதல் ஆகிய முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. சித்தவைத்தியத்தில் ஔடதம் கொடுத்து சிகிச்சை அளிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது சாஸ்திரக்கலை, மந்திரம் போன்றவற்றிலும் உள்ள உண்மைகளை நாம் அறிந்து அவற்றை எமது கலாசாரத்துக்கேற்ப வளர்க்கவேண்டும். பஞ்சாங்கம் கணிப்பது மற்றும் கிரக சேர்க்கைகள் பற்றிக் குறிப்பிப்படடுவது ஆகியவற்றில் மிகவும் நுணுக்கமான விஞ்ஞானம் பொதிந்துள்ளது. இவற்றை நாம் மற்றவர்களுடன் சேர்ந்து மூடநம்பிக்கை என ஒதுக்கிவிடுதல் எமது அறிவின்மையையே காட்டும்! இவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். உதாரணமாக மூளை சம்பந்தமாக ரோகமுள்ளவரின் நட்சத்திரம் கிரகசேர்க்கைகள் என்ன? இருதய சம்பந்தமான ரோகமுள்ளவர்கள், இரைப்பை சம்பந்தமான ரோகமுள்ளவர்கள், அறுவைச் சிகிச்சைக்குட்படுபவர்கள் ஆகியோரின் கிரகசேர்க்கைகள் என்ன என்பது பற்றி ஒரு பரந்த ஆய்வு நடத்துதல் மிகவும் நன்மை பயக்கும்,

ஔடதம் என்பது தாவர மூலிகைகளாலும், தாதுக்களாலும் (உலோகங்கள்) மற்றும் உயிரினங்களின் சில பகுதிகளைக் கொண்டும் உதாரணம்: கோரோசனை, கஷ்தூரி தயாரிக்கப்படுவதாகும். பாஷாணங்கள் உலோகங்கள், தாவர மூலிகைகள் மருந்தில் சேர்க்கப்படுவதற்கு முன்னதாக அவை நன்கு சுதகிரிக்கப்பட்டு அவற்றின் தீயகுணங்கள் நீக்கப்படுகின்றன. ஒரு வைத்தியன் ஔடதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் ஒரு நோயாளியை அவன் வருந்தும் துன்பத்திலிருந்து விடுவிக்கிறான். ஆகவே எந்த ஒரு ஔடதத்தைப் பிரயோகித்தாலும் அதன் செய்கைகளைப் பற்றிய அறிவை வைத்தியன் பெற்றிருக்கவேண்டும். ஒரு ஔடதத்தின் செய்கை

ஔடதங்கள் தயாரிக்கும்போது தற்போதைய நிலைமைகளை அனுசரித்து அவற்றின் சக்தியைக் கூட்டுவதற்கு ஒரு மருந்தில் சேரும் சரக்குகளை கூட்டி அல்லது வேறு சிலமூலிகைகளைச் சேர்த்து மருந்துகளைச் செய்து பிரயோகிக்க வேண்டும். அப்பொழுது மருந்தின் வீரியம் அதிகரிப்பதுடன் நோயும் இலகுவில் தணிவடையும். சிலவைத்தியப் பரம்பரையில் உள்ளவர்கள் மறையும்போது சித்த வைத்தியமும் படிப்படியாக மறைந்து வருகின்றது. ஆராய்ச்சிகள் மேற்கொண்டு தரமான ஔடதங்களைத் தயாரிப்பதன்மூலம் இந்நிலையைத் தடுப்பதற்குச் சித்தவைத்தியத்துறை முயற்சி எடுப்பது அவசியம்.

சித்தவைத்தியத்தில் உள்ள உண்மைகளை ஆராய்வதற்கு வைத்தியத்துறையைச் சேர்ந்த வைத்தியர்களும், ஆராய்ச்சியாளர்களும், ஆய்வுகூடப் பரிசோதனை வல்லுனர்களும் எமக்கு உதவ முன்வருதல் வேண்டும். இந்தியாவில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு சில மூலிகைகளின் சத்தில் ஊசிமருந்துகளும் தயாரித்துள்ளனர். நாமும் அதைப் பின்பற்றுவதில் காலம் போக்காது ஈடுபடல் வேண்டும்.

நண்டுக்கல் பஸ்பம் என்னும் மருந்து விருக்கத்தில் (Kidney) விளையும் கற்களைக் (Renal-Calculi) கரைத்து வெளியேற்றும் என எமதுவைத்தியத்தில் கூறப்பட்டுள்ளது. சிலவைத்தியர்கள் அதனைப் பிரயோகித்து அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலையிலுள்ளவர்களையும் குணப்படுத்தியுள்ளனர் கற்கள் விளைவதற்குப் பலகாரணங்கள் உண்டு எந்தவிதமான கற்களுக்கு நண்டுக்கல் பஸ்பம் சிறந்தது என நாம் ஆராய்ச்சி மூலம் நிச்சயித்துவிட்டால் பிறர் எமது சிகிச்சை முறை

[5ம் பக்கம் பார்க்க]




## சிவபூசை

செயற்கு அரிய செயல் செய்வதில் பலருக்குப் பெரும் ஆசை. ஆனால் செயற்கருமம் செயல் செய்து சிறப்புறுவது ஒரு சிலரே ஆவர்.

சைவசமயக் கோட்பாடுகளில் சரியை கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சாதனங்களால் இறைவனை வழிபட்டு மேன்மை அடையும் முறை உண்டு.

இவற்றில் கிரியையாவது மந்திரம் பாவனை செயல் என்னும் மூன்று அங்கங்களைக் கொண்டது இம்மூன்று அங்கங்களும் இடம் பெறுவதாய் சைவசமயிகள் அனைவராலும் அவரவர் இயல்புக்கு ஏற்ப செய்யத்தக்க கிரியை ஆத்மார்த்த சிவபூசையாகும்.

சிவனின் மகிமையையும் உயிராகிய நமது சிறுமையையும் சிவபூசையாகிய செயலின் அருமையையும் ஆராய்ந்து பார்த்தால் மனிதனால் செய்யத்தக்க செயற்கருமம் செயல்களுள் சிவபூசையே முதலாவது என்பது விளங்கும்.

சூரபன்மனின் வரபலத்தால் தன்னாட்டையும், அரசையும் இழந்து தவித்த இந்திரன் தன் சிறுமைக்குக் காரணம் தனது தீவினையே என்று உணர்ந்து தான் செய்த தீவினை நீங்கவும், தன் சுவர்க்கநாடும் அரசும் தனக்குக் கிடைக்கவும் சீர்காழியில் சிவபூசை செய்தான் என்ற செய்தி கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது

எல்லாவிதமான தீவினைகளை அழிக்கவும் நன்மைகளை அடையவும் மனிதனால் செய்ய வேண்டிய சிவபூசையைத் தம் தகுதிக்கு ஏற்ப குருவிடம் பெற்றுச் செய்யப் புத்திசாலி ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

சிவபூசையாயினும் சரி ஆலயங்களில் இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாடுகளாயினும் சரி இவற்றால் நாம் நன்மை அடைவது ஒன்றே

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சித்த மருத்துவத்தில் ஆய்வுகள்.....

4-ம் பக்கத் தொடர்ச்சி

யில் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை நீக்குவதுடன் எமது மருத்துவர்களுக்கும் நம்பிக்கை அளிக்க முடியும்.

ஆராய்ச்சிகள் மேற்கொள்வது உடனடியாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய காரியம் அன்று சித்தவைத்தியத்துறை மாணவர்களுக்கு ஔடத செய்முறைகளைக் கற்பிக்கும்போது அதற்குரிய அத்திவாரம் அமைக்கப்படவேண்டும். நாம் செய்யும் அல்லது தயாரிக்கும் மருந்துகளை நோயாளர்களில் பிரயோகித்துக் காட்டினுல், அதன் பலன்களை மாணவர்கள் அறியும்போது அவர்களுக்குநம்பிக்கை உண்டாவதுடன அதில்பற்றும் ஏற்படும். சித்த மருத்துவர்கள் மேலைத்தேச மருந்துகளைப் பாவிக்கின்றுர்கள் என்ற குற்றச்சாட்டு பலராலும் விமர்சிக்கப் படுகின்றது. இது எமது வைத்தியர்களின் குற்றமல்ல. அரசாங்கம் சித்த மருத்துவர்களுக்குப் போதிய மருந்துகளைச் செய்துவிநியோகிக்காமையும் இதில் ஆய்வுகள் மேற்கொள்ளாததுமே காரணமாகும். மேலைத்தேச மருந்துகள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுவதனுல் பலரும் இலகுவில் அதனைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. மேலைத்தேச மருந்துகள இறக்குமதி செய்யப்படாமல் விட்டால், பற்றும் உள்ளூரில் மருந்து உற்பத்தி ஊக்குவிக்கப்படாவிட்டால் மேலைத்தேசவைத்தியர்களும் சொத்தமல்லிபோன்றவற்றையே பாவிக்க வேண்டியிருக்கும். ஊசி மருந்து கொடுப்பதற்குரிய நீரைக்கூட (water for injection) அரசாங்கம் இறக்குமதி செய்கின்றது ஆனுல் சித்த வைத்தியத்தைப் பொறுத்தளவில் அரசாங்கத்தின் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டால்தான் எமது வைத்தியத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த முடியும்.

மனிதனைப் பீடிக்கும் எல்லா நோய்களுக்கும் சித்த மருத்துவமே சிறந்தது என அபிப்பிராயப்படுதல் கூடாது. சித்த மருந்துகளால் சிகிச்சிக்கக்கூடிய நோய்கள் எவை என நாம் வகைப்படுத்தி அவற்றிற்குரிய தரமான மருந்துகளைத் தயாரிப்பது முக்கியம். சித்த மருந்துகளால் சிகிச்சிக்கமுடியாத நோய்நிலைகளை அந்நோய்களில் விசேஷ அறிவு பெற்ற வைத்தியர்களிடம் அல்லது அதற்குரிய வைத்தியசாலைக்கு அனுபபுதல் மக்களுக்கு நாம் செய்யும் மிகப் பெரியசேவையாகும். அத்துடன் சிலநோய்களை மேலைத்தேய மருந்துகளின் மூலம் இலகுவில் தீர்க்கலாமென அறிந்தால் அதற்குரிய சிகிச்சையை நன்கு அறிந்து அதன் பக்கவிளைவுகளை அனுசரித்துச் சிகிச்சிப்பதில் தவறில்லை. வைத்தியரிடம்நோயாளிஎதிர்பார்ப்பது தனது நோய்தீரவேண்டுமென்பதே.

சித்த மருந்துகளைத் தரமாகத் தயாரிப்பதில் நாம் கூடிய கவனமெடுப்பதன் மூலமும், அவற்றில் ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலமுமே நாம் சித்தவைத்தியத்தை வளர்ச்சியடையச் செய்யலாம்.


### கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

விஞ்ஞானம் ஆண்டு 4—13-00; ஆண்டு 5—16-00 பிரான்சிஸ் - ஞானப்பொன்ராஜ்; ஆண்டு 7—7-00 ஆண்டு 8—8-50 திருமதி சி குணரட்ணம் - யாழ் இந்து மகளிர் கல்லூரி விஞ்ஞான ஆசிரியை. 1986 தை முதல் அமுலுக்கு வந்த புதிய பாடத் திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. வி பி. பி உண்டு. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம்

(C 982)



எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
விஜயகாந்த்- பானுசந்தர்
தீர்ப்பு என் கையில்



லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
கல்யாணகுமார்-தேவிகா
நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
புதிய பிரதி



வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
ஆனந்த ராகம்
(புதிய பிரதி கலர்)



உஷா மினி
Roger Moore as
James Bond 007...... in
A VIEW TO A KILL
மிகப் புதிய
ஜேம்ஸ்பொண்ட்
சண்டைப்படம்.


## 5 மைல் தூரம் நடைபெற்ற...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பகுதியில் விமானக் குண்டு வீச்சும், துப்பாக்கிச்சூடும் நடைபெற்றபோதிலும் திட்டமிட்டபடி ஊர்வலம் நடைபெற்றது.

தங்கவேலாயுதபுரம் விவசாயிகள் படுகொலை, நெடுந்தீவு 'குமுதினி' படகுப் படுகொலை, தாவடி விமானக் குண்டு வீச்சு, படுகொலை, வவனியா பேயாடி கூழாங்குளம் கார் படுகொலை சம்பவங்களை சித்திரிக்கும் ஊர்திகள் உட்பட சுமார் 20 ஊர்திகள் கலந்துகொண்டன.

யாழ். கிவன்கோவிலடியிலிருந்து காலை 10-30 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம், கே.கே எஸ்.வீதி வழியாக, மனேகராசந்தி வரை சென்று, பின்னர் ஐந்துசந்தி, மானிப்பாய் வீதி வழியாக, மிட்டாஸ்கடைசந்தி சென்று ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார்வீதி, ஆஸ்பத்திரிவீதி வழியாக கச்சேரி சென்று அங்கிருந்து கச்சேரி-நல்லூர் வீதி வழியாக முத்திரைச்சந்தி சென்று, பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 12-30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலையடைந்தது.

ஊர்வலம் ஆரம்பத்தில் வைத்தீஸ்வராச்சந்தியை வந்தடைந்தபோது கோட்டைப் பகுதியில் குண்டுச்சத்தமும், துப்பாக்கி வெடிச்சத்தமும் கேட்டதுடன் பார்வையாளராக நின்ற சிலர் வீதியில்ஓடிக் கொண்டிருந்ததினுல்,பதறம் ஏற்பட்ட போதிலும்,தொடர்ந்து ஊர்வலம் முன்னேறியது.

யாழ். கச்சேரிக்குள் ஊர்வலத்தில் சென்றவர்கள், மகஜரைக் கையளிக்கச் சென்றபோது அங்கு அரசாங்கஅதிபர் இல்லாததினுல் பின்வாசலினுல் வெளியேறி நல்லூர் நோக்கிச்சென்றனர்.

நல்லூர்க் கந்தசுவாமிகோவிலில் நடந்த கூட்டத்தில்.யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்திடம், அரசாங்க அதிபர் மூலம், ஜனுதிபதிக்கு சமர்ப்பிக்க மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம் நேற்று முற்றாக ஸ்தம்பித்தது.

பஸ் சேவை உட்பட வாகன போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை. சந்தைகள் கூடவில்லை, அரசாங்க, தனியார் காரியாலயங்கள் இயங்கவில்லை பாடசாலைகள நடைபெறவில்லை; வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை.

யாழ் மாநகரசபை மற்றும் யாழ். கச்சேரி அரசாங்க காரியாலயங்கள், தனியார் ஸ்தாபனங்கள் ஸ்தம்பித்தன. வ. பி. போ. ச. பஸ் சேவை, மினிபஸ் சேவைகள் நடைபெறவில்லை.

யாழ். வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

மக்கள் நடமாட்டமின்றி மயான அமைதி நிலவியது. மக்கள் நண்பகலுக்குப் பின்னர் வீடுகளிலேயே தங்கியிருந்தார்கள். (க)

## யாருடையது?

யாழ் தொலைபேசி அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. பொ. தில்லைநாதன் என்பவர் யாழ். கஸ்தூரியார் வீதியில் ஒருதொகைப் பணத்தைக் கண்டெடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில்ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை தட்டாதெரு உப மின் நிலைய மின் முகாரியாகக் கடமையாற்றிய தியாகராசா ஜெகநாதன் மின் அத்தியட்சகராக பதவிஉயர்வு பெற்றுள்ளதால் அவரின் இடத்திற்கு மின் முகாரியாக திரு க. தர்மராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த நான்கு வருடங்களாக யாழ். மாநகரசபையில் கடமையாற்றிவருகிறுர்.


இலங்கையின் முதல் ஓடியோ கிளப்

இலவச அங்கத்துவம்

நியூவிக்ரேஸ் ஓடியோ கிளப் அங்கத்தவராவதற்கு அறிமுகம், வைப்புப்பணம் வேண்டியதில்லை. இன்றே அங்கத்துவம் பெற்றுப் பின்வரும் பாடல்களை ஒறிஜினல் மக்சல் கசற்றில் கேட்டு மகிழுங்கள்.

★ பக்திப்பாடல்கள்,
★ புதிய பழைய சினிமாப்பாடல்கள்,
★ நாதஸ்வர, வாத்திய இசைகள்,
★ பிறந்தநாள், திருமணப் பாடல்கள்,
★ தத்துவ, சோகப் பாடல்கள்,
★ டிஸ்கோ, ஆங்கில, இந்திப்பாடல்கள்,
★ சதைவசனங்கள்.

வேண்டிய கசற்றை வேண்டிய நாட்களுக்கு
சேட்டு ரசித்த பின் வாடகை
ஒருகசற்றுக்கு ஒரு நாளுக்கு
ரூபா 2/- மட்டுமே.

பாடல்கள் பதித்த ஒறிஜினல் மக்சல் கசற்
விலை ரூபா 29-50

மேலதிக விபரங்களுக்கு நேரில்

நியூ விக்ரேஸ் ஓடியோ கிளப்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி; 23532

A-304


## சூடுபட்டு பலியானுர்

(ஏருவூர்)

ஏருவூர்-தளவாய் கிராமத்தை புதன் நள்ளிரவு ஆயுதப்படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது விஷக்கடி வைத்தியர் சின்னத்தம்பி கந்தையா (வயது 49) துப்பாக்கிச்சூடுபட்டு மரணமானுர்.

இவரது சடலம் இன்னமும் கிடைக்கவில்லையாம். (ய-ச)

## இலங்கைப் பிரச்னையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும், அப்பாவிப்பொதுமக்கள் கொல்லப்படுவதையிட்டு இந்திய அரசு 'ஆழ்ந்த கவலை' யைத் தெரிவிக்கிறது என்றும் ராஜ்ய சபையில் பேசியபோது எதிர்க்கட்சிகள் அனைத்தும் அமைச்சரின் பதில் திருப்தியாக இல்லை என்றுகூறி வெளிநடப்பு செய்தன!

அமைச்சர் பஹத் மேலும் பேசியதாவது: காலம் கடந்து கொண்டே போகிறது. இப்பிரச்னைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும், காலம் தாழ்த்திக் கொண்டு செல்வதற்கு இலங்கை அரசை அனுமதிக்க மாட்டோம். பாரதத்தில் புகலிடம் அடைந்துள்ள தமிழர்கள் பாதுகாப்புடன் இலங்கை திரும்ப வழி செய்யப்பட வேண்டும்.

"ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சம்பந்தமான மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் இந்தியப் பிரதிநிதி குழுவிடம் இலங்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து பிரச்சனை எழுப்புமாறு வலியுறுத்தியுள்ளோம்.

இலங்கைப் பிரச்னை விஷயத்தில் மத்தியஸ்தராக விளங்க பாரதம் தயாராக உள்ளது. ஆனுல் இலங்கை அரசுஇராணுவத் தீர்வுகாண முயன்று வருகிறது இலங்கையில் பிரிவினை சக்திகட்கு பாரதம் ஆதரவு அளிக்காது இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணிப்பாதுகாக்கும் வகையில் அதன் அரசியல் சட்ட கட்டமைப்புக்குள்இனப் பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஒன்று காண விரும்புகின்றேம்.

### உறுப்பினர்கள் கண்டனம்

இலங்கையில் தமிழர் இனப் படுகொலைகளை நிறுத்த இந்திய அரசு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று உறுப்பினர்கள் அனைவரும் வற்புறுத்தினர்

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. எம். சி, பண்டாரி பேசுகையில்; இலங்கையில் இனப்பிரச்னை அடிப்படையில் அரசியல் பிரசனை என்றும், அரசியல் ரீதியிலேயே பிரசனை தீர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர், திரு. ஆர். மோகன ரங்கம் பேசுகையில்; இலங்கைத் தமிழர் பிரச்னை ஒரு இந்தியப் பிரச்னை என்றும் இதில் தாமதம் மேன்மேலும் உயிர்ச்சேதத்தையே விளைவிக்கும் என்றும் தமிழர்கள் கொலைக்கு இந்திய அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தி. மு. க. உறுப்பினர் திரு முரசொலி மாறன் பேசுகையில்; இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை இனப் படுகொலை' என்று இந்திய அரசு அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஜனதா உறுப்பினர் திரு. எம் எஸ் குருபாதசாமி பேசுகையில்; இந்தப் பிரச்னையை மனித உரிமைகள் கமிஷன் முன்பாக கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் (ச)

### அந்தியேட்டி அழைப்பு



திருமதி தங்கரத்தினம் சுப்பையா

இறைவனடியில்: 30-01-1986

திதி: 01-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து. அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து, எம்மை உயரவைக்க அயராது உழைத்த எங்கள் அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் சங்கானையில் அவரதுஇல்லத்தில் 01-03-1986ல் நடைபெறும். அன்று மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

Dr. பத்மநாதனும் பாரிபாரும்,
மில் வீதி,
சங்கானை. A-983

## விமானத்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழீழ ராணுவம் 'ரெலோ' முதலான இயக்கங்களின் சுமார் முப்பது முகாம்களைக் கண்டுபிடிப்பதில் அரச ஆயுதபபடைகள் வெற்றிபெற்றுள்ளதாகவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை இயக்கங்களின் முகாம்களின்மீது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ள விமானத் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு வடபகுதியிலுள்ள பொதுமக்களை மேற்படி அறிக்கை எச்சரிக்கிறது.

## இலங்கை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவிகளை நிறுத்துமாறு உலக நாடுகளைக் கோரும் தீர்மானமொன்றினை சர்வதேச மனித உரிமை இயக்கம் ஜெனீவா மாநாட்டில் மேற்கொண்டதைத் தொடர்ந்துமே நோர்வேயும் கனடாவும் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக பி பி.சி. மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டதைக் கண்டித்து ஊர்வலம்!

[பண்டத்தரிப்பு]

இளவாலை மாரீசன் கூடல் டனித கைத்தார் ஆலய பங்குத்தந்தையும் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி உப அதிபருமான அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டதைகண்டித்தும் அதைத் திரும்ப ஒப்படைக்சுக்கோரியும் ஊர்வலம் ஒன்று அப்பகுதி பொது மக்களினல் நடாத்தப்பட்டது.

புனித கைத்தார் ஆலய முன்றலில் இருந்து இளவாலை, பெரியவிளான் ஆகிய இடங்களுக்கு ஊடாக பண்டத்தரிப்பு சந்திவரை நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் சிறுவர், சிறுமியர் பெண்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்,

# வேலணையில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிப்பு!

[வேலணை]

வேலணைப்பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த திரு. க செல்வராசா என்பவர் தமது றலிச் சையிக்கிலை தனது வீட்டுக்கு முன் உள்ள கேற்றுக்குள் பூட்டி வைத்து விட்டு வீட்டிற்குள் சென்று வருவதற்குள் சைக்கிள் திருடப்பட்டுள்ளது இவ்வாறு இதே பகுதியைச் சேர்ந்த திரு. சு. கனகரெத்தினம் என்பவருக்குச் சொந்தமான புத்தம் புதிய ஏசியா சைக்கிலையும் கடைக்குப் பக்கத்தில் பூட்டிவைத்து விட்டு கடைக்குள் சென்று திரும்புவதற்குள் மாயமாகத் திருடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல சைக்கிள்கள் திருடப்பட்டுவருவதனல் பொது மக்கள் அதிவிழிப்பாக தங்களது பொருட்களில் கவனம் செலுத்துமாறு கேட்கப்பட்டு வருகின்றனர்.

# திருத்தாய் விஜயம்

(யாழ்ப்பாணம்)

அகில உலக திருக்குடும்பக் கன்னியர்களின் திருத்தாய் மேரி சிலேவன் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள திருக்குடும்பக் கன்னியர்கள் மடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். யாழ். கன்னியர் மடம் மகா வித்தியாலயங்கள் இரண்டிற்கும் விஜயம்செய்து அதிபர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்தார். ரோம் நகரிலிருந்து இலங்கையில் உள்ள கன்னியர்களைச் சந்திப்பதற்காக ஒரு வார கால விஜயத்தை மேற்கொண்டு திருத்தாய் அவர்கள் வந்திருந்த போதே யாழ்ப்பாணத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டார்.

(ஐ)

# தவக்காலச் சிந்தனை!



17 ம் நாள்

## சிலுவையை நோக்கு

இயேசு ஒரு பயணி தனது பயணம் பாதையின் இறுதியில் சிலுவை மரணம் காத்திருந்ததை உணர்ந்தார் ஜெருசேலம் நகரம் மகிமையின் நகரம். ஆயினும் ஜெருசலேமை நோக்கி விரைந்த அவர் பாதை மரணத்தை எதிர்க்கொண்ட பயணமே அநீதியை விரும்பிய பொய்மையை வளர்த்த அதிகாரத்தினருடன் ஒத்துழைத்திருந்தால் நீண்டகாலம் வாழ்ந்திருக்கலாம். தன் உயர்ந்த கொள்கைகளை விற்று குறுக்கு வழிகளைக் கையாண்டிருந்தால் சிலுவை மரணத்திலிருந்து தப்பியிருக்கலாம். ஆனல் பற்றற்ற நிலையில் முற்றுந்துறந்தமுனி வராக அவர் மேற்கொண்ட பயணத்தில் எதையும் பெற்றுக்கொள்ள ஆசை கொண்டவரல்ல. அவர் குடிக்க இணங்கிய கிண்ணம் அவர் உயிரைப் பிழிந்த இரத்தத்தின் கிண்ணம். சிலுவையில் தம்மை உடைத்துப் பலியாக்கி என்நினைவாகச் செய்யுங்கள் என்றுரைத்து உன்னைக்கேட்கிருர். என் கிண்ணத்தை உன்னல் பருகமுடியுமா?

சிலுவையைச் சுமந்து என் பின்னே வா!
வாழ்வை வெற்றிகொண்ட இயேசுவின் அழைப்பு.

சுவாமி ஜீவா போல்
அ. ம. தி

# இன்றைய பலன்

**மாதம்**- மாசி
திகதி- 16 [1986-2-28]
கிழமை- வெள்ளி
திதி- சதுர்த்தி பி.ப வரை
நட்சத்திரம்- சித்திரை மு.இ வரை

மேடம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறுபதறுக்கு வழித் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும். இனசன விருத்திக்கும் இடமுண்டு.

இடபம்! அன்னிய நபரொருவரால் ஏமாற்றப்படுவீர்கள். பெரியவர் ஒருவருடன் கருத்துமோதல் ஏற்படலாம். இன்று அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

மிதுனம்: பிதாவழிச் சுகக் குறைவுமுண்டு. பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள். தெய்வத்தின் துணையுண்டு.

சடகம்; இயந்திரங்களில் தொழில் புரிபவர்கள் இன்று அதிக கவனம் சொள்ளவேண்டும். திடீர்பிரயாணத்திற்கும் இடமுண்டு.

சிங்கம்: உடல நிலையில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். உறவினர் வருகைக்கும் இடமுண்டு. உற்சாகமான தினம்.

கன்னி; குடும்பத்திலும்சிறு பூசல்கள்தோன்றும். நண்பராலும் எதிர்ப்புக்கள் தோன்றும். நாவடக்கம் நன்று.

துலாம்: இன்று எவ்விடயத்திலும் புதிய உற்சாகப் பிறக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்புக் கிடைக்கலாம்.

விருச்சிகம்: எதிர்பார்த்த விடயமொன்று சிறு முன்னேற்றத்தைத் தரும். நீண்ட நாள் நண்பர் ஒருவரைமீண்டும் சந்திக்க நேரும்.

தனுசு: சகோதர வழியால் மனதில் சஞ்சலமுண்டு. உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும். உஷாராக இருக்கவும்.

மகரம்: வெற்றி உமதருகில் விரைந்துவரும். எதிர்பார்த்தவர்களே ஆதரவு தருவார்கள். களஸ்தி வழியாலுப் நன்மை சேரும்.

கும்பம்- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்கப் பணியில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்: அவசரப் போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தோன்றும் வீணன சிந்தனைகளினல்சோர்வடைவீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

# பண்டாரி மீண்டும் வரலாம்

[கொழும்பு]

இலங்கையின் இனப்பிரச்சனை குறித்து இலங்கைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த பாரத வெளியுறவுச் செயலர் திரு. பண்டாரி மீண்டும் இங்கு வருவார் என கொழும்பு அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் சில நாட்களில் இங்கு வரவிருக்கும் அவர், பிராந்திய சுயாட்சி குறித்து தமிழர்களின் ஆலோசனைபற்றி இலங்கைத்தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டறிவார் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.


# தரத்திற்குப் பேர்போன பீ.சீ.சீ. வழங்கும் மற்றுமோர் மாபெரும் விலைக்குறைப்பு!

| சலவை/கழுவு சோப் | ரூ. சதம் |
|---|---|
| சவரின் பார் | 15 . 00 |
| சன் - றே | 4 . 90 |
| ஸ்னோ - வைட் | 3 . 10 |
| **வாசனை சோப்** | |
| பீசிசி சந்தன சோப் | 4 . 75 |
| புதிய சுவேந்திரா | 4 . 50 |
| நைட் அன்ட் டே | 3 . 75 |
| கோல் டார் | 3 . 75 |
| ஏஞ்சல் பேபி சோப் | 4 . 50 |
| ஹெறல்த் ஜோய் | 3 . 70 |

| சவரப் பொருள்கள் | ரூ. சதம் |
|---|---|
| சவரச் சவர்க்காரக் கேக் | 5 . 25 |
| சவர மாற்றுச் சவர்க்காரம் | 5 . 00 |
| சவரப் பிளாஸ்திக் | 7 . 00 |
| **வாசனைப் பவுடர்** | |
| புதிய சுவேந்திரா | 17 . 00 |
| நைட் அன்ட் டே | 15 . 50 |
| **பைனேல்** | |
| போத்தல்கள் - (பிளாஸ்திக்) 750 மி. லீ. | 27 . 50 |
| கொள்கலங்கள்-4.5 லீட்டர் | 155 . 00 |

| பேர்மா - ஷாப் | ரூ. சதம் |
|---|---|
| பிளேட்கள் | 1 . 50 |
| பாதுகாப்பான றேசர் | 16 . 95 |
| **சம்பயன் - (கவசத்துடன்)** | |
| பிளேட்கள் | . 65 |
| **சம்பயன் - (கவசமின்றி)** | |
| பிளேட்கள் | . 60 |
| **வில்கின்சன்** | |
| ஒருமுறைப் பாவனை றேசர் | 4 . 10 |
| **கிளீன்** | |
| கழுவு தூள் | 8 . 95 |
| வைற் ஒயில் | 15 . 00 |
| குக்ஸ் ஜோய் | 17 . 00 |

Ribbs N&L

BCC
அரச உடைமை ஆக்கப்பட்ட
பிரிட்டிஷ் சிலோன் கோப்பரேஷன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகனும் மற்றுமொரு

[3ம் பக்கத் தொடர்ச்சி]

## பயத்தினால் ஓடினேன்

திரும்பவும் விமானம் வந்து குண்டுகள் பொழிந்து. பலத்த சத்தங்களும் கேட்டது நான் பயத்தினால் என் பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கொண்டு அருகில் உள்ள என் தாயார் வீட்டிற்கு ஓடினேன், திரும்பவும் விமானங்கள் குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தன விமானச்சத்தம் குறைந்ததும், ஹெலிக் கோப்டர் ஒன்று வந்து, வட்டமிட்டு சுடத் தொடங்கியது.

சூட்டுச்சத்தங்கள் ஒழிந்ததும், நான்பிள்ளைகளைத்தேடிப் போனேன். அப்போது வீட்டின் பக்கத்திலுள்ள மதில் இடிந்து விழுந்திருந்தது.

## உடல் வேறு தலை வேறு

தென்னை, மா, பலா மரங்கள் முறிந்திருந்தன. உதவிககு நின்றராஜசேகரத்தி,சடலம்ன் மதிலின் இடிபாடுகளுக்குள் கருகியநிலையில் எரிந்துகிடந்தது. அப்போது என் உறவினர் செங்காதரன் அங்குவந்தார். அவரின் உதவியுடன் சடலத்தை வெளியில்எடுத்தோம் என் மகன் மயூதரன் உடல் வேறு தலைவேறாகக்,கருகியநிலையில் சடலமாக கிடந்தார். இருவரையும் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம்.

சம்பவம் நடந்த இடம் மக்கள் மிகநெருக்கமாக வாழும் பகுதியாகும். அனேக வீடுகள் குண்டு போட்டதால் சேதமடைந்திருந்தன. வான் பயிர்கள் நாசமடைந் திருந்தன. என் கணவருக்கும், இறந்த மலைநாட்டு சிறுவனின் பெற்றோருக்கும் அறிவித்தேன்.

## தந்தை சாட்சியம்


மலைநாட்டை சேர்ந்த சுந்தரம் ஸ்ரீரங்கன் கூறியதாவது: இறந்த ராஜசேகரன்என்மகன் அவரைதான் ஒரு வருடத்திற்கு முன்பாக தாவடியில் சம்பவம் நடந்த வீட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைக்கு அனுப்பி வைத்தேன். நான் தோட்டத்தில் இருக்கும் போது என் மகன குண்டு பட்டு காயமடைந்துள்ளதாக தகவல் கிடைத்தது நான் இங்கு வந்தபோது, இரு சடலங்களையும் பார்த்தேன் என் மகனை அடக்கம் செய்தேன், என் மகன் ஆகாயக் கப்பல் தாக்குதலில் இறந்தாக அறிந்தேன்.

விசாரணை மார்ச் மாதம் 3ம் தேதிககு ஒத்திவைக்கப் பட்டது. [க]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
வே. வல்லிபுரம்
(உரிமையாளர்:
ஸ்ரீ முருகன் அரிசி ஆலை,
பரந்தன்,
ஈஸ்வரன் படமாளிகை,
கிளிநொச்சி)



தோற்றம்: 29-04-1917
மறைவு: 09-03 1985
திதி: 28-02-1986

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

பூநகரி வீதி,
பரந்தன்
28-02-1986. [C 979]

---

# பால் விநியோக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபை சார்பில் பால் விநியோகஸ்தர்களுக்கான விரிவுரை ஒன்று நேற்றுமுன் தினம் சபையின் காரியாலயத்தில் நடைபெற்றது

வடபிரதேச தீவிர கறவை அபிவிருத்தி உப அலுவலர் டாக்டர் இ. சு. நவரட்ணம் ஒழுங்கு செய்திருந்த இவ்விரிவுரை 'உற்பத்தித்திறன் அபிவிருத்திக்கு இனவிருத்தியும் பண்ணையாளர்களின் பங்கும்' என்ற தலைப்பில் நடந்தது:

சபையின் தலைவர் திரு சண்முகநாதன், காரியதரிசி ஆகியோர் உரையாற்றிய இந்த நிகழ்ச்சியில் மில்க் வைற் அதிபர் திரு. கனகராசா கலந்து கொண்டு பசுமாடு வளர்த்தல், பராமரித்தல் சம்பந்தமான வெளியீடுகளை அன்பளிப்புச் செய்தார்.

பசுமாட்டு அபிவிருத்தி சம்பந்தமாக நடத்தப்படும் முதலாவது விரிவுரை இதுவாகும். இதுபோன்ற விரிவுரைகள் மேலும் நடத்தப்படவுள்ளன.

---


# விற்பனைக்கு

## கோழித்தீன்

பண்ணையாளர்களே!

CEYLON OILS and FATS CORPORATION தயாரிப்புகளான எல்லா வகை கோழித்தீன்களையும் மீண்டும் குறைந்தவிலைகளில் நம்பிக்கையுடன் எம்மிடம் பெறலாம்

நாங்கள் இக்கூட்டுத்தாபனத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள். அத்துடன் பலரும் விரும்பி வாங்கும் உள்ளூர் உற்பத்தியான MAYUURA FARM கோழித்தீன்களும் கிடைக்கும்.

தொகையாக வாங்குபவர்களுக்கு கவர்ச்சிகரமான சலுகைகள், டெலிவரி வசதிகளும் உண்டு.

ஷோபா ஏஜென்சீஸ் லிமிற்றெட் (கிளை)
தெல்லிப்பளை தபாற்கந்தோருக்கருகே
அல்லது
SHOBAS SHOPPING CENTRE
603, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் சந்திக்கருகே) (A 299)


---

# நாவற்குழி விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 6ம் திகதி வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. என். ஏ. நாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுச் செயலாளர் ஆசிரியர் திரு. வி என். சிவஞானம் போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளார் வட்டாரக் கல்வியதிகாரி திரு ஏ. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

---



காலை:
5-05 இலங்கை - பாகிஸ்தான் டெஸ் போட்டி (5ம் நாள்)

மாலை:
5-25 செய்திகள்
5-30 மலரும் அரும்புகள்
6-00 'யப்பானியக் குரங்குகள்' [விவரணம்]
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 'ஸ்வர ரங்கா' கீழைத்தேய இசை
7-25 குரங்கு
8-00 செய்திகள் [சிங்களம்]
8-20 குரங்கு [தொடர்ச்சி]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
6-25 நடப்பு நிகழ்ச்சிகள் [சிங்களம்]
9-45 வார இறுதி திரைப் படம் 'த நட்டி புரொபசர்'
11-35 ஒளிபரப்பு முடிவு

---

# பவள விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 26ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பவளவிழா கொண்டாட்டங்கள் நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையால் பின் போடப்பட்டிருப்பதா கல்லூரியின் பழையமாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பவள விழா இம் மாதம் 2-ம் திகதியும் மார்ச் மாதம் முதலாம் 2ம்திகதிகளிலும் சிறப்பாகக் கொண்டாட எல்லா விதமான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தபோதிலும் தற்போது இப்பகுதியில் நிலவும் பதற்ற நிலை காரணமாக பின் போடப்பட்டுள்ளது.

இம் மாதம் 28ம் திகதி பல ஆண்டுகளாக நடைபெறாமலிருந்த கல்லூரி பரிசளிப்பு விழவை சிறப்பாக நடாத்த தேவையான நிதியை பழைய மாணவர் சங்கம் திரட்டிக் கொடுத்ததுடன் அடுத்த முதலாம் 2 திகதிகளையும் பழையமாணவர்கள் பங்குபெறும் கொண்டாட்டங்களாக அமைய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

1ம் திகதியன்று கிறிக்கெற் உதைபந்தாட்டப் போட்டிகளும்பழையமாணவர்களில் சிறந்து விளங்கி பெயர் பெற்ற வீரர்களை தக்கமுறையில் கௌரவிக்கவும் 2ம் திகதி அன்று பழைய மாணவரான வைத்திய கலாநிதி என். சரவணபவானந்தன் அவர்களால் தன் தந்தையின் ஞாபகமாக நிறுவப்பட்ட சமூகவியல் கூடதிறப்பு விழாவும்,அதைத்தொடர்ந்து பழைய மாணவரான யாழ்ப்பாணப் பிரதமஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்களால் பவள விழா [illegible] வையொட்டி இயற்றப்பட்ட கல்லூரிக்கதை அரங்கேற்றமும் அதை அடுத்து அவரையும் பழைய மாணவரும் சிறந்த எழுத்தாளருமான ஐ. சாந்தன் அவர்களையும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முடிவில் இக் கல்லூரியின் 25 ஆண்டுகள் சேவையாற்றிய ஆசிரியர்களையும் மற்றைய ஏனையோர்களையும் தகுந்த முறையில் கௌரவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்ச்சிகள் யாவும் இப்போது பின்போடப்பட்டுள்ளன.

---

# வடமராட்சியிலும் அபிவிருத்திக் கண்காட்சி

(புலோலி)

யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் நடத்தும் எமது பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக் கண்காட்சி வடமராட்சியிலும் எதிர்வரும் 1-ம், 2-ம் திகதிகளில் நடைபெறும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இச்சமூக அபிவிருத்திக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக விலங்கியல்துறைப் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் ஆரம்பித்து வைக்கின்றார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரைஆகியோரும் இந்த அபிவிருத்திக் கண்காட்சி ஆரம்பவிழாவில் கலந்துகொள்வார்கள்.

இக்கண்காட்சியில் விவசாயம், மீன்பிடி, இரசாயன வளம், மருத்துவம், கைத்தொழில், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், இயற்கை வளங்கள், பனைவளம், தொழில் நுட்பம் போன்ற பல்வேறு வகைப்பட்ட கண்காட்சிகள் இடம்பெறவுள்ளன. இக்கண்காட்சியையொட்டி சனி, ஞாயிறு தினங்களில் வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் எதுவும் நடைபெறாதெனவும், விசேஷ போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ், பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்படவுள்ள இக் கண்காட்சி யாழ். பரியோவான் கல்லூரியில் கடந்த ஐந்து நாட்கள் நடைபெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# ரயில்பாதைகளில் முன்எச்சரிக்கை நடவடிக்கை

[கொழும்பு]

மலையக ரயில் பாதைகளில் பாறுங்கற்கள் வைக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பாதுகாப்புப் பிரிவினர் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக ரயில்கள் புறப்பட முன்னர் ஆயுதம் தாங்கிய படையினருடன் ''ரயில்கார்'' ஒன்று முதலில் புறப்பட்டு பாதைகளின் சீர்நிலையைக் கவனிக்கும். (ச)

---

# மாவிட்டபுரம் விழிப்புக்குழு

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் பகுதியில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை செயற்பட ஆரம்பித்துள்ளன.

மக்களின் உடைமைகளுக்கு பாதுகாப்பளிக்கும் நோக்குடனும், மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை முன் கூட்டியே அறிந்து அதற்கேற்ப செயல்படும் நோக்குடனும் இந்த விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன

மாவிட்டபுரம் பகுதிக்கு நான்கு பிரிவுகளாக இக் குழுக்கள் நிறுவப்பட்டு செயல்பட ஆரம்பித்துள்ளன

---

# ஹெட்டிக்கு....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

யுள்ளது ஹெய்ட்டியின் முன்னாள் தலைவரான திரு டுவாலியர் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்காக இந்நிதி உதவியை இவ்வருடம் நிறுத்திபிருந்தது.

சுமார் 2.6 கோடி டாலர் பெறுமதியுள்ள இந் திநியுதவி மீண்டும் அளிக்கப்படவிருப்பது பற்றி அறிவித்து உரையாற்றிய அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் ஹெய்ட்டியின் புதிய அரசாங்கம், ஜனநாயக, மனித உரிமைத்துறைகளில் புகுத்தியுள்ள புதிய வரவேற்கத்தக்க நடைமுறைகளையொட்டியே இவ்வுதவி மீண்டும் அளிக்கப்படுகிறது என்றார். (செ)

---

# பயிற்சி முகாம்

(அராலி)

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வலி மேற்கு சங்கானைப் பிரிவின் விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்பயிற்சி முகாமுக்கு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ் தலைமை வகித்தார். இப்பயிற்சிமுகாம் முடிவில் முகாமை நல்ல முறையில் பயன்படுத்தியமைக்கும், முன்நின்று உழைத்த மாவத்தை விளையாட்டு மைதானத்திற்கும் விளையாட்டு அதிகாரி திரு. கே. அரிச்சந்திரா நன்றி கூறினார்.

பயிற்சி முகாமுக்கான சகல ஏற்பாடுகளையும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினர் ஒழுங்குசெய்திருந்தனர்.

---

# வெள்ளிச்சிந்தனை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்றி இறைவனுக்கு நாம் செய்யும் செயல்களால் மதிப்போ இன்பமோ ஏற்படுவதில்லை என்பதையும், நாம் நன்மையடைவதுக்கு சிறந்த உபாயமாகத் தன்னைப் பூசிக்கும் முறையை இறைவன் நியமித்திருக்கிறான் என்பதையும் ஒவ்வொரு சைவசமயியும் உணரவேண்டும்.

யாவர்க்குமாம் இறைவர்க்கொருபச்சிலை என்றவாக்கியம் ஒரு பச்சிலையாலேயே சிவபிரானைப் பூசித்துச் சிவனது முழு அருளையும் பெறலாம் என்பதை உணர்த்துகின்றது. தன் அன்பர் ஒருவரிடம் பெறும் பச்சிலையால் இறைவனுக்கு ஒரு லாபமும் ஏற்படுவதில்லை. ஆனல் இப்படிப் பூசிக்கும் ஒருவனின் அன்பினாலேயே இறைவன் மகிழ்ந்து அருள் புரிகின்றான்

சிவபெருமானையும் அவரால் அருளப்பட்ட ஆகமங்களையும் சிவபூசைகளையும் அன்பு செய்து பூசிக்கும் பேறு ஒன்றே நம் செய்யத்தக்க செயற்கரும் செயலாகும்.

தொண்டனேன் பட்ட தென்னை
தூயகாவிரியின் நன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக்
குங்குமக் குழம்பு சாத்தி
இண்டை கொண்டேற நோக்கி
ஈசன் எம்பெருமான் தன்னைக்
கண்டனைக் கண்டிர தே
காலத்தைக் கழித்தவாறே.

(அப்பர்சுவாமிகள்)

-அருளாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## டிப்போவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

தோண்டாவிலுள்ள வ. பி. போக்குவரத்துசசபையின் டிப்போவிலிருந்து பெறுமதியான பஸ் செஸி ஒன்று கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது, நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது. (மா)

## யாழ. இந்துவில் திருவுருவச்சிலை

(யாழ்ப்பாணம)

திருக்கேதீசசரத்தில் அப்பர் சுவாமிகள் திருமடத்தில் எழுந்தருளச் செய்வதற்கென வார்க்கப்பட்டு அபபர் சுவாமிகளின் திருவுருவச்சிலை பவனியை இன்று காலை யாழ. இந்துக்கலலூரியில் கண்டு தரிசிக்கலாம்.

திருக்கேதீச்சரத்துக்குச் செல்லும் வழியில்நாச்சிமார் கோவிலிலிருந்து மங்கள வாத்தியங்களுடனும் தேவார பாராயணத்தோடும் அப்பர் திருவுருவச்சிலைபவனி இடம்பெறுகின்றது.

இச்சிலையினைத் திருக்கேதீச்சரததில் பிரதிட்டை செய்வதற்கான நிதிஉதவயினையாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் செயதுள்ளனர். (ந)

# மீண்டும் விமானக் குண்டுவீச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் வீசப்பட்டதாகவும், அவ்வீடு முற்றாக சேதமடைந்ததுடன் வீட்டிலிருந்த ஜோன் கத்தலீன் (65-வயது என்னும் பெண்பலியானதாகவும் நமது வேலணை நிருபர் தெரிவிக்கிறார்.

இறந்தவரின் மகனான ஜோன் எட்வின் (ராஜன்) (31-வயது) என்பவர் படுகாயமுற்றார். இவர் 'டொபி' தொழிற்சாலை நடத்தி வருபவர். இவரது தந்தையார் வீட்டுக்கு அண்மையிலுள்ள தேவாலயத்துக்குச் சென்றிருந்தால் உயிர்தப்பித்துக்கொண்டார். இவ்வீட்டில் நின்ற கார் ஒன்றும் சேதமடைந்துள்ளது. குண்டுத்தாக்குதலினால் சுமார் 12 லட்சம் ரூபா நட்டமேற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

### வட்டுக்கோட்டையில்...

காலை 7-30மணியளவில்மாதகல் கடற்கரைப்பகுதியில் இரு விமானங்கள் குண்டுகளை வீசின. ஒரு மீன்பிடிப்படகும் இந்துஆலயமொன்றின் தீர்த்த மண்டபமும் சில வீடுகளும் பலத்த சேதமடைந்ததாக நமது பண்டத்தரிப்பு நிருபர் தெரிவிக்கிறார்.

7-45 மணியளவில் தாவடி தெற்கு. சுதுமலை ஆகிய கிராமப்பகுதிகளில் விமானத்தாக்குதல் இடம்பெற்றது. மூன்று விமானங்கள் இத்தாக்குதலை நடாத்தின. கடந்த 19ம் திகதி இக்கிராமத்தின் சுற்றுவட்டப் பகுதி விமானக் குண்டுவீச்சுக்கு இலக்கானது தெரிந்ததே. அன்றைய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கிடையில் நேற்றுக் காலை இப்பயங்கரசசம்பவம் நிகழ்ந்துள்ளது.

தாவடி தெற்கிலுள்ள தும்புத்தொழிற்சாலைகுண்டுத்தாக்குதலால் முற்றாகச் சேதமடைந்துள்ளது. தொழிற்சாலைக் கட்டிடம் எரிந்து புகைமண்டலமாகக்காட்சியளித்தது.

தொழிற்சாலையில்காவலாளியான லூக்காஸ் [21 வயது என்பவர் பலியாகி இரத வெள்ளத்தில் காணப்பட்டார்.

முத்துவேலு கனகராசா என்பவருக்குச் சொந்தமானது சேதமடைந்த இத்தொழிற்சாலைக்கட்டிடம். இக்கட்டிடத்துக்கு அடுத்தடுத்துள்ள த. அருமைநாயகம் பண்டிதர் ஆறுமுகம், எஸ். சண்முகராஜா, ஆசிரியர் ஆகியோரின் வீடுகளும் குண்டுவீச்சினல் சேதமடைந்தன.

ஒருவீடு எரிந்த நிலையிலேயே இருந்தது. இவ்வீடுகளின் தளபாடங்களும் வாகனங்களும் எரிந்திருந்தன. இப்பகுதியிலுள்ள மரங்கள் முறிந்தும் அடியோடு வீழ்ந்தும் காணப்பட்டன.

இப்பகுதியில் சுமார் ஒரு மணித்தியாலம் இத்தாக்குதல் இடம்பெற்றது.

வானுயர வட்டமிட்ட 3 விமானங்களும் ஒன்றன் பின் ஒன்றாகத் தரையை நோக்கி வந்துகுண்டுகளை வீசின

### சுதுமலையில்

சுதுமலையில் உள்ள ஒரு ஆசிரியரின் வீடும் குண்டுவீசித் தகர்க்கப்பட்டது.

மூன்றுவிமானங்களும் தமது தாக்குதலை முடித்துக்கொண்டு கிழக்குதிசை நோக்கிச்சென்று மறைந்து விட்டன.

### கோண்டாவில் கிழக்கில்.

பலாலி முகாமிலிருந்து இரு ஹெலிகொப்டர்கள் பறந்து கோண்டாவில் பகுதியை நோக்கி வந்தன.


பிரயாணிகள் வந்துகொண்டிருந்த மினிபஸ்ஸைக் குறிவைத்து இரு ஹெலிகொப்டர்களும் துப்பாக்கியாலும், ஷெல்களாலும் தாக்கத் தொடங்கின.

இத்தாக்குதலுக்கஞ்சிய பிரயாணிகள் மினிபஸ் கோண்டாவில் கிழக்குப் பக்கமாக ஓடி மறைந்துவிட்டது. ஆனல் ஹெலிகெப்டர்கள் கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைச் சுற்றி சரமாரியாக வேட்டுகளைத் தீர்த்தன. ஆலயத்துக்கு அருகாமையில்உள்ள வீட்டிலிருந்த ஆலய பிரதமகுரு அமிர்தலிங்கம் சிவராசா [சிவம் 50வயது] ஐயர் பலியானார். காலை 8 மணியளவில் ஆலயப் பூசையை முடித்துவிட்டு வீட்டில் மனைவியுடனும், மூன்று பிள்ளைகளுடனும் இருந்த போதே, தலையில் துப்பாக்கி குண்டுபட்டு மரணமானர்

ஆலயத்தின் கூரைத்தகடுகளும், உட்பிரகாரமும் குண்டுகள் தாக்கிச் சேதப்படுத்தப் பட்டிருந்தன.

ஒரு கட்டத்தில் ஹெலிகொப்டர்களிலிருந்து தீப்பிழம்புகள் போன்ற பொருட்கள் தரைநோக்கி விழுந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

நேற்றுக்காலை, விமான, ஹெலிகொப்டர் தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளிலிருந்த போராளிகள் எவரும் எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளவில்லை. (மா)



கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலய பிரதம குரு சிவராசா [சிவம்] ஐயர் , தமது வீட்டிலிருந்தபோது ஹெலிகொப்டரிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியிருப்பதை இப் படத்தில் காணலாம்.

# "சர்வாதிகாரம் எங்கும் நீடித்தது கிடையாது!"

(யாழ்ப்பாணம்)

"சர்வாதிகாரிகள் எந்தவொரு நாட்டிலும் நீடித்து ஆட்சி செய்தது கிடையாது, பிலிப்பைன்ஸ் நாட்டிலும் சர்வாதிகாரி மார்க்கோசை மக்கள் எழுச்சி மூலம் இன்று துரத்தியடித்துள்ளனர். சர்வாதிகாரப் போக்குள்ள ஆட்சியைத் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்களமக்களும் கிளர்ந்தெழுந்து ஒருநாள் விரட்டி அடிக்கவே போகின்றனர்."

இவ்வாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், ஏனைய பதினைந்து கூட்டுக்குழுவினரும் இணைந்து தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து நடத்திய ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்துக்குத்தலைமை தாங்கிப் பேசுகையில் தமிழீழ அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அமைப்பாளர் திரு. பொன். மதிமுகராசா குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபை முன்னால் மேயர் திரு. இ. விசுவநாதன் பேசுகையில்,

"ஈழநாடு" பத்திரிகை விமானக்குண்டுவீச்சுக்குத் தப்புவது எட்படி? என்று கட்டுரைவெளியிட்டதை யாவரும் அறிந்தோம். இன்று சாதி, மத வேறுபாடற்ற விமானத் தாக்குதலிலிருந்து தட்புவதற்கும் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் திரண்டு எழுந்துள்ளோம். (ஐ)



தாவடியில் நேற்று விமானக்குண்டு வீச்சுக்கிலக்கான தும்புத்தொழிற்சாலை எரிந்து சேதமடைந்த நிலையில் காட்சியளிக்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone: 24126.

## மரண அறிவித்தல்

### திரு. கார்த்திகேயர் சின்னத்துரை

[வட்டுக்கோட்டைத்தொகுதி சர்வோதய அமைப்பாளர், தொல்புரம்.]

இளைப்பாறிய ஆசிரியர் திரு. கா. சின்னத்துரை அவர்கள் 27-02-86 வியாழக்கிழமை மாலை சிவபதமடைந்தார். இவர் பரிபூரண ஐஸ்வரியத்தின் அன்புக் கணவரும், நந்தபாலன், ஜெயபாலன், நந்தாவதி, ஜெயவதி ஆகியோரின் தந்தையும், அருந்தவம், வசந்தி, சி.நல்லையா (ஓமான்) ஆகியோரின் மாமனும், கிரிஜா, கவிதா, ஷர்மிளா, தயாவதி, தயாபரன், தயானந்தன், விஞேத் ஆகியோரின் பேரனும், தங்கவேலு, உதயச்சந்திரன், சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 1-00 மணியளவில் பொன்னாலை மயானத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். [C986]

### திருமதி கதிராசி ஐயன்

நயினாதீவு 7ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி ஐயன் கதிராசி காலமாகிவிட்டார் இவர் ஆண்டி ஐயனின் அன்புமனைவியும், முத்தன், தில்லையம்பலம், விநாயகர், மாரிமுத்து, சண்ணன், திருச்சந்திரன், மார்க்கண்டு, தெய்வானை, மீனாட்சி, பார்வதி, பராசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணன் இராமலிங்கம், வைத்திலிங்கம், பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-03-1986 சனிக்கிழமை நயினாதீவு சல்லிபரவி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(C 984) தகவல்: முத்தன்

### திருமதி கார்த்திகேசு வள்ளிப்பிள்ளை

(அல்வாய்)

காலஞ்சென்ற பொன்னர் கார்த்திகேசுவின் மனைவியும், காலஞ்சென்ற முருகர் சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வியுமான வள்ளிப்பிள்ளை காலமானார். இவர், சதாசிவம், அன்னப்பிள்ளை (முரசுமோட்டை), நாகம்மா (ஆசிரியை சித்தி விநாயகர் வித்தியாசாலை பருத்தித்துறை), செல்வரத்தினம் (மாவட்ட நீதிமன்று பருத்தித்துறை), நவமணி, செல்வதி (ஆசிரியை நெடுங்கேணி மகாவித்தியாலயம்), ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவப்பிரகாசம், பரமேஸ்வரி (ஆசிரியை பொலிகண்டிஇந்து தமிழ்க்கலவன் பாடசாலை), செல்லையா (அதிபர் பழம்பாசி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆகியோரின் மாமியாரும், M. S. சின்னத்தம்பி, M S கந்தையா (வவனியா), ஆகியோரின் சகோதரியுமாவார். சிவநேசன் (U K.), சிவானந்தன் (மே. ஜேர்மனி), ரஞ்சனி, ஸ்ரீரஞ்சினி, ஜெயரஞ்சினி, தவரஞ்சினி, மதியழகன். மதிவிநோதினி, மதிரஜனி, மதிவாணன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-2-86 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல்:
கா. செல்வரத்தினம்
மகன்.

C 981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org